தேசிய சேமிப்பு வங்கி - 2024
--

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தேசிய சேமிப்பு வங்கியின் (“வங்கி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அதன் துணை நிலை கம்பனிகளினதும் (“தொகுதி”) திரண்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கி மற்றும் தொகுதியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கி மற்றும் தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன், அல்லது

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின ் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியினதும் தொகுதியினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால ் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடா ்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள ் ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள ் ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், 3 எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி மற்றும் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி மற்றும் தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கி மற்றும் தொகுதியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாடு கணக்குகள் அல்லது பதிவேடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
வங்கியினுடைய உள்ளக கிளைகளின் மீதி முன்னைய ஆண்டிற்காக ரூபா 269.328 மில்லியனுடன் ஒப்பிடும் பொது மீளாயள்வாண்டின் போது ரூபா 143.231 மில்லியனாக இருந்தது. இந்த மீதி பல கிளைகள் மற்றும் தலைமை அலுவலக பேரேட்டுக் கணக்குகளின் திரட்டல்களிலிரந்து உருவானது. அந்த மீதிகளின் ஒரு பகுதி பல ஆண்டுகளாக மாற்றம் அடையாதிருந்தது. எவ்வாறாயினும், வங்கியானது அந்த உள்ளக கிளை கணக்கு மீதிகளை இணக்கம் செய்வதற்கு முறையான நடைமுறையை உருவாக்கி இருக்கவில்லை. பதிலாக இது ரூபா	மரபுவழி முறைமையின் நிலுவையாக இருக்கின்ற மீதி அண்ணளவாக இரண்டு ஆண்டுகளாக முற்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு அவற்றினை நெருக்கமாக கண்காணிக்கின்றது. கவனமாக பரிசோதித்த பின்னர் அந்த மீதிகள் உரிய அனுமதியுடன் வருமான கூற்றறிற்கு திரும்பவும் எழுதப்படும். 2025 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு உள்ளக கிளைகளிற்கு இடையேயான மீதிகள் ரூபா 102,415,543 ஆகும். (செலவு மீதி) அந்த மீதிகள் குறைந்திருந்ததுடன் மீளமைக்கப்பட்ட கிளை	உள்ளக கிளைகளிற்கு இடையே மீதிகளை இணக்கம் செய்வதற்கு போதுமான மற்றும் போதிய நடைமுறைகளை செயற்படுத்தப்பட வேண்டும்.

269.328 மில்லியன் முன்னைய அண்டினுடைய மீதிக்காக முழு ஏற்பாடுகளையும் ஒதுக்குவதற்கு தெரிவுசெய்யப்பட்டது.	நுழைவுகளிற்கு நிதிப் பிரிவிற்கு மாற்றப்படும். 2024 செப்தெம்பர் 18 இல் புதிய பிரதான வங்கியியல் முறைமைக்கு மாற்றப்பட்ட பின்னர் உள்ளகஅந்த கிளைகளில் வித்தியாசங்கள் இல்லாமையால் கிளை பதிவுகள் சரியான நேரத்தில் தானாக நாளதுவரையாக்கப்படும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியால் வழங்கப்பட்ட மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 561,313 மில்லியனாகும். மொத்த கடன் மற்றும் முற்பணங்களில் ரூபா 3,518 மில்லியன் (ஐ.அ.டொலர் 12.01 மில்லியனுக்கு சமமானவை) வெளிநாட்டு கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் அவற்றின் மீத பெறவெண்டிய வட்டியைக் பிரதி நிதித்துவப்படுத்துகின்றது. 2025 மே 31 இல் உள்ளவாறு இந்த கவெளிநாட்டுக் கடனின் பெறவேண்டிய மீதி ரூபா 4,298 மில்லியனாகும்.	கம்பனியானது மீள்பட்டியலிடப் படுகின்ற முன்மொழிவுகளிற்காக இரண்டு வங்கிகளிடமிருந்தும் அனுமதியை வேண்டியிருந்தது. சபையானது முறையான நடவடிக்கைகளில் திறைசேரி செயலாளரின் ஆலோசனையை வேண்டியிருந்தது.	வங்கியானது கடன் வழ்குவதற்கு முன்னர் முறையான வடிக்கையாளர் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் எதிர்கால கடன் தவணைக் கட்டணங்களை குறைப்பதற்கு கடுமையான கண்காணிப்பு மற்றும் பின்தொடருதல் வழிமுறைகளை செயற்படுத்தவும் நீண்ட நிலுவையிலுள்ள கடனை அறவிடுவதற்கு சகல நடடிக்கைகளையும் எடுப்பதற்கு மேலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
ஆ) 2025 மே 31 இல் உள்ளவாறு நிறுவனக் கடனின் நிலுவையாக இருக்கின்ற மீதி ரூபா 72,250 மில்லியனாக இருந்ததுடன் அதில் செயற்பாடற்ற கடன் வகுதியின் கீழ் ரூபா 5,777 மில்லியன் அல்லது 8 சதவீதத்தை பிரிதி நிதித்துவப்படுத்துகின்றது. மேற்குறிப்பிட்ட வெளநாட்டு கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன் 74 சதவீத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் திறைசேரி உத்தரவாங்களால் பிணை வைக்கப்பட்ட தொடர்புபட்ட அரசாங்க கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன் 20 சதவீதத்தை பிரதி நிதித்துப்படுத்துகின்றது	தற்போது செயற்பாடற்ற கடன்களில் அறவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. அறவீட்டு நடவடிக்கையின் நிலை கீழே தரப்பட்டுள்ளன. **பிம்புத் பினாஸ் பிஎல்சீ (BFC)** - இரண்டு கடன்களிற்குமான வேண்டுகை கடிதம் வாடிக்கையாளருக்கு அனுப்பப்பட்டது. தற்போது வடிக்கையாளர் மீது சட்ட நடவடிக்கை வழக்கை தொடருவதற்கு அரச சபையால் தயாரிக்கப்பட்டிருந்தது. **வரையறுத்த ரெக்னோ பூங்கா அபிவிருத்தி (தனியார்) கம்பனி.** – ரெக்னோ பூங்கா செயற்திட்டத்தை விவாதிப்பதற்கு நிதி அமைச்சில்	வங்கியானது கடன்கள் வழ்குவதற்கு முன்னர் முறையான வாடிக்கையாளர் மீளாய்வுகள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் தவறுகளை குறைப்பதற்கு கடுமையான கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடவடிக்கை பொறிமுறை அமுலாக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் நிலுவையாக இருக்கின்ற கடன் மீதிகளை அறவிடுவதற்கும் வங்கியின் செயற்பாடற்ற கடன் மீதிகளை

2025.07.28 கூட்டம் நடைபெற்றிருந்தது. கூட்டத்தில் அமைச்சு முழுமையாக கடன் வசதியை தீர்ப்பதற்கு தீர்மானித்திருந்ததுடன் சகல நிலுவையாக இருக்கின்ற தொகைகளையும் தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. கடன் வசதிகள் 2025.12.01 இல் முழுமையாக தீர்க்கப்படுமெ தெரிவிக்கபபட்டது.

வரையறுத்த கல்கிசை கோட்டல் (தன்யார்) (MTL) – வங்கியால் நியமிக்கப்பட்ட சட்ட சபையின் ஆலோசனை ஏனைய சகல வங்கிகளுடன் 2025 ஒக்தோபர் 3 இல் நடைபெற்றிருந்தது. கலந்துரையாடல் பின்னர் மற்றும் வாடிக்கையாளரின் அழுத்தங்களை நிறைவேற்றுவதற்கு வங்கியினுடைய வேண்டுகைளை கருத்திற் கொண்டிருந்தது. கடன் அறவிடலை நிறைவேற்றுவதற்கு சட்ட சபை ஆலோசனை வழங்கியிருந்தது். RPI (பிரைவேட்) லிமிட்டெட் ((அ) கருத்துரையில் வழங்க்கப்பட்டவாறு)

குறைப்பதற்கு ஒவ்வொரு முயற்சியும் எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இ) 2025 மே 31 இல் உள்ளவாறு வங்கியால் வழங்கப்பட்ட ரூபா 5 மிலியனிற்கு மோலான நிலுவையாக இருக்கின்ற கடன் ரூபா 100,661.97 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 88,457.13 மில்லியன் தொகை கிளைகளால் வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 12,204.84 மில்லியன் கடன் பிரிவால் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட கடனில் ரூபா 5 மில்லியனிற்கு மேலான கடனில் ரூபா 8,099.49 மில்லியன் செயற்பாடற்ற கடன் வகுதியின் கீழ் வகுதிப்படுத்தப்பட்டிருந்தது.

ரூபா 5 மில்லியனை விஞ்சிய கடன் மீதிகளில் நிலுவையாக இருக்கின்ற கடன் மீதிகளின் விபரங்கள் மற்றும் 2025.05.31 இல் உள்ளவாறான அவற்றினுடைய நேரொத்த NPL மீதிகள் பின்வருமாறு உள்ளன.

பிரித்தல் பகுப் பாய்வு	மொத்த நிலுவை (ரூபா.)	NPL நிலுவை (ரூபா.)	மொத் த NPL %
கிளை துறை	16,119,743,051	1,156,957,750	7.18
நிறுவன நிதிக் கிளை	72,337,389,050	5,865,278,943	8.11
கடன் பிரிவு	12,204,833,843	1,077,244,543	8.83
மொத்த வங்கி	100,661,959,944	8,099,481,235	8.05

இதன்படி, கிளைகளால் வழங்கப்பட்ட

வங்கியானது கடன்கள் வழ்குவதற்கு முன்னர் முறையான வாடிக்கையாளர் மீளாய்வுகள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் தவறுகளை குறைப்பதற்கு கடுமையான கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கை பொறிமுறை அமுலாக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் நிலுவையாக இருக்கின்ற கடன் மீதிகளை அறவிடுவதற்கும் வங்கியின் செயற்பாடற்ற கடன் மீதிகளை குறைப்பதற்கும் ஒவ்வொரு முயற்சியும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ரூபா 5 மிலியனிற்கு மோலான கடன்களில் செயற்பாடற்ற வகுதியின் கீழ் ரூபா 1,156 மில்லியன வருகின்றது. கிளைத் துறை போட்போலியோ 7.18 சதவீதத்தை பிரதிநிதித்துப் படுத்துகின்றதுடன் வங்கியால் வழங்கப்பட்ட ரூபா 5 மிலியனிற்கு மோலான கடன்களில் 1.15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

எவ்வாறாயினும், 2025.09.30 இல் உள்ளவாறு கிளையால் வழங்கப்பட்ட ரூபா 5 மிலியனிற்கு மோலான கடன்களில் நிலுவையாக இருக்கின்ற மீதி ரூபா 16,332.85 மில்லியனாகும் அதேநேரம் அதே வகுதியில் செயற்பாடற்ற நிலுவையாக இருக்கின்ற கடன் மீதிகள் ரூபா 937.537 மில்லியனாகும். இது கிளைத் துறை போட்போலியோ 5.74 சதவீதத்தை பிரதிநிதித்துப்படுத்துகின்றதுடன் வங்கியால் வழங்கப்பட்ட மொத்த கடனில் ரூபா 5 மிலியனிற்கு மோலான கடன்களில் 0.97 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

மேலும், செயற்பாடற்ற கடன் மீதிகளை மேலும் குறைக்கும் நோக்கில் வங்கி அதன் அறவீட்டு நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அ) வங்கியானது வங்கியால் வழங்கப்பட்ட வசதிகள் செயற்பாடற்ற கடனாக வராதிருக்க முறையாக சேவயாற்றுகின்றதென உறுதிப்படுத்துவதற்கு 2025.10.09 ஆந திகதிய 1140/2025 ஆம் இலக்க பொது முகாமையாளர் சுற்றறிக்கை பிரகாரம் அதன் அறவீட்டு நடவடிக்கையை தொடங்கியிருந்தது.

ஆ) 2024.12.23 ஆந் திகதிய 94/2024 ஆம் இலக்க பொது முகாமையாளருடைய சுற்றறிக்கை பிரகாரம் கிளைகளிற்கு இணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் அறவீட்டு நடவடிக்கைகளிற்கு உதவியளிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இ) வங்கியானது 2024.09.27 ஆந் திகதிய 1106/2024 ஆம் இலக்க பொது முகாமையாளருடைய சுற்றறிக்கை பிரகாரம் வழமையான

கடன் திருப்பிச் செலுத்துபவர்கள் விசேட கடன் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஈ). பெலியட்ட அறவீட்டு நிலையம் மேலதிக உத்தியோகத்தர் ஒதுக்கத்தின் ஊடாக 2025 இல் வலுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் செயற்பாடுகள் செயற்பாடற்ற கடன்களை (NPLs) குறைக்கும் நோக்கத்தடன் இலக்கிடப்பட்ட முயற்சிகளை துரிதப்படுத்துவதற்கு AGM (அறவீடுகள்) இன் மேற்பார்வையின் கீழ் அதன் நடவடிக்கைகளை தொர்டங்குவதன் மூலம் நெறிப்படுத்தப்பட்டது.

உ) வங்கியானது ‘‘இழப்பு’’ வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்ட செயற்பாடற்ற கடன்களின் அறவீட்டை நிறைவேற்றுவதற்கு நான்கு கடன் சேகரிப்பு கம்பனிகளின் சேவையை பெறுதல் தொடங்கப்பட்டது. 2025 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு வங்கியினுடைய வீதம் 5.65 சதவீதமாக இருந்தமை சராசரி கைத்தொழிலை விட குறைவாக இருந்தது.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்ப்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு	கோரப்படாத வைப்பு ஒதுக்க கணக்கின் ஊடாக வாடிக்கையாளருக்கு வங்கியால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் பொது திறைசேரியின் திரண்ட நிதியத்திலிருந்து மீளளிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்காய்வு திகதியில் 2024 ஆம் ஆண்டுவரை இன்னமும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்காத மொத்தம் ரூபா 193.452 மில்லியன் வாடிக்கையாளருக்கு	வங்கியானது 2025 டார்ச் 20 ஆந் திதகதிய கடிகம’ மூலம் பெறவேண்டிய தொகை வேண்டியிருந்தது. மேலும் 2025 யூன் 6 இல் பொதுத் திறைசேரியால் விபரங்கள் கோரப்பட்டிருந்தது. 2025 செப்தெம்பர் 30 ஆந் திகதிய அவர்களுடைய கடிதத்தில் திறைசேரி செயற்பாடற்ற மீதிகளை மீள செயற்படுத்துவதற்கு தனிப்பட்ட வாடிக்கையாளர் விபரங்களை	வங்கியானது NSB அதிகாரச் சட்டத்தின் வேண்டுகையுடன் இணங்கியோழுக வேண்டும்.

	செலுத்தப்பட்டிருந்தது.	கோரியிருந்ததுடன் வங்கி விபரங்கள் இணக்கம் செய்தல் செயற்பாட்டில் உள்ளது.	
(ஆ) அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளிற்கான தொழில்நுட்ப ஆபத்து முகாமைத்துவம் மற்றும் மீளமைப்பு மீதான பிரமாண கட்டமைப்பு வேலைகள் மீதான இலங்கை மத்திய வங்கியின் 2021 இன் 16 ஆம் இலக்க நெறிப்படுத்தலின் பட்டோலை 1			
(i) பிரிவு 4.3	ஆபத்து தகவல் முறைமையின் (CIS) சபை அனுமதித்த பட்டியல் வங்கியில் இருக்கவில்லை.	ஆபத்து தகவல் முறைமையின் பட்டியல் ஒருங்கிணைத்து BIRMC இற்கு ஒரு தாள் சமர்ப்பித்திருந்தது.	வங்கியானது 2021 இன் 16 ஆம் இலக்க CBSL நெறிப்படுத்தலின் உரிய பிரிவுடன் இணங்கியொழுக வேண்டும்.
(ii) பிரிவு 4.3.3	சகல ஆபத்தற்ற தகவல் முறைமைகளும் இஒவ்வொரு இரண்டு அண்டுகளிற்கும் ஒரு தடவை மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் ஆபத்தற்ற தகவல் முறைமைகளாக தவிர்ப்பதை விளக்கமளிக்கின்ற போதிய ஆவணங்கள் இருக்காமையால் அண்மையில் அத்தகைய மீளாய்வு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.	ஆபத்து தகவல் முறைமைகளும் இனங்காணப்பட்டிருந்ததுடன் 2025 இன் Q1 இன் போது சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆபத்தற்ற தகவல் முறைமைகள் 2026 இன் Q1 இன் போது மீளாய்வு செய்யப்படும்.	வங்கியானது 2021 இன் 16 ஆம் இலக்க CBSL நெறிப்படுத்தலின் உரிய பிரிவுடன் இணங்கியொழுக வேண்டும்.
(iii) பிரிவு 4.6.6	வங்கியானது மூன்றாம் தரப்பினர் சேவை வழங்குநர் மற்றும் முகவர்களிற்கான ஆபத்து மற்றும் சுய மதிப்பீட்டு கட்டுப்பாடு (RCSA) உள்ளடங்க போதிய தொழில்நுடப ஆபத்து முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு அளவீடுகளை அமுல்படுத்தி யிருக்கவில்லை மற்றும்	ஆபத்தான தகவல் முறைகைளிற்கு ஆதரவான வழங்குநர் சேவைகளிற்காக ஆபத்து மதிப்பீடு மற்றும் விடாமுயற்சியுடன் சேர்த்து BIRMC அனுமதி பெறப்படும்.	வங்கியானது 2021 இன் 16 ஆம் இலக்க CBSL நெறிப்படுத்தலின் உரிய பிரிவுடன் இணங்கியொழுக வேண்டும்.

		வங்கியின் BIRMC ஆல் அனுமதிக்கப்பட்டவாறு மூன்றாம் தரப்பினர் சேவை வழங்குநர் மற்றும் முகவர்களிற்கான மூன்றாம் தரப்பினர் சேவை வழங்குநர் மற்றும் முகவர்களால் மேற்கொள்ளப்படும் சேவைகளின் முக்கியத்துவம் மற்றும் வினைத்திறனுடன் இணங்கியிருந்தது.		
(iv)	பிரிவு 5.1.2	ஆபத்து முறைமைகளுடன் தொடர்புட்ட உத்தியோகத்தர், முகவர் மற்றும் மூன்றாம் தரப்பினர் உள்ளடங்கலாக வேண்டப்பட்ட குறைந்தது ஆண்டிற்கு ஒருதடவை நபர்கள் உள்ளக சான்றுபடுத்தல் பரிசோதனை, தகவல் பாதுகாப்பு அடிப்படைய விழிப்புணர்வு பயிற்சி என்பன பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் வங்கி இந்த வேண்டுகையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய கற்பித்தல் முகாமைத்துவ முறைமையுடன் சான்றுபடுத்தல் பரிசோதனை தகவல் பாதுகாப்பிற்காக விருத்தி செய்யப்பட வேண்டியதுடன் ஒன்லைனில் நடாத்தப்பட வேண்டியிருந்தது. இது 2026 இன் Q1 இலிருந்து விழிப்புணர்வு பயிற்சியை சீரமைக்கும் பட்டியல் பிரகாரம் செய்யப்படும்.	வங்கியானது 2021 இன் 16 ஆம் இலக்க CBSL நெறிப்படுத்தலின் உரிய பிரிவுடன் இணங்கியொழுக வேண்டும்.

1.8 பொதுவான IT கட்டுப்பாடு

வங்கியானது 2024 செப்தெம்பர் 13 இலிருந்து பிரதான வங்கியியல் முறைமைக்கு அதன் பழைய முறைமையை (மரபு) தரமுயர்த்தியிருந்ததுடன் தனியார் கணக்காய்வாளர் தரவு குறைப்பு மீளாய்வு, பொதுவான IT கட்டுப்பாடுகள் மீளாய்வு மற்றும் ஆபத்து IT பிரயோக கட்டுப்பாட்டு மீளாய்வு என்பன செயற்படுத்துவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். புதிய பிரதான வங்கியில் முறைமையின் (CBS) மீளாய்வின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்பட்டிருந்தன.

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) வாடிக்கையாளர் முகாமைத்துவம்		
(i) PEP காட்சிப்படுத்தல் மற்றும் ஆவண முகாமைத்துவம் CBS உடன் ஒன்றிணைக்கப்படவில்லை	ஆவண முகாமைத்துவம் (DMS) நடைமுறை மற்றும் தொழில்நுட்ப வரையறை காரணமாக CBS இன் ஒன்றிணைக்கப்படவில்லை. REP இற்காக பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டியல் இருக்கவில்லை. PEP காட்சிப்	வங்கியானது முழுமையான தானியங்கி மற்றும் நெறிப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு சூழல் என்பவற்றினை உறுதிப்படுத்துவதற் CBS, ஆவண முனாமைத்துவ முறைமை, மற்றும் PEP

	படுத்தபடுவதுடன் செயற்பாட்டில் உள்ள கொடுக்கல் வாங்கல் கண்காணிப்பு AML முறைமை (COMPASS) ஊடாக செயற்படுத்தப்பட்டன. நாளாந்த கொடுக்கல் வாங்கலை COMPASS காட்சிப்படுத்தல் உறுதிப்படுத்துகின்றது. ஏதாவது கறுப்பு பட்டியல் அல்லது உயர்ந்த ஆபத்து கணக்குகள் உடனடியாக இனங்காணப்பட்டதுடன் இணக்க நடைமுறைகள் பிரகாரம் தடுக்கப்பட்டது.	காட்சிப்படுத்தல் நடைமுறை என்பவற்றிற்கு இடையில் ஒருங்கிணைந்த பொறிமுறை தாபிப்பதற்கு அவசியமான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(ii) உயர்ந்த ஆபத்து வாடிக்கையாளர்களிற்கான வாடிக்கையாளர் உருவாக்கல் மற்றும் கணக்கு திறத்தல் AML மெய்மையாய்வு, KYC மீளாய்வு மற்றும் இணக்க அனுமதி இல்லாமல் செய்ய முடியும்.	AML மெய்மையாய்வு வாடிக்கையாளர் பதிவேடு உருவாக்குவதற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டதுடன் கிளைகள் வாடிக்கையாளர் அல்லது பதிவுகளை செயற்படுத்துவதற்கு முன்னர் KYC மற்றும் AMC மெய்மையாய்வு உள்ளடங்கலாக சகல வாடிக்கையாளர்களின் விடாமுயற்சியையும் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.	வங்கியானது AMC மெய்மையாய்வு, KYC மீளாய்வு மற்றும் இணக்க அனுமதி என்பவற்றினை பூர்த்தியாக்காமல் வாடிக்கையாளர் உருவாக்கம் மற்றும் கணக்கினை திறத்தல் என்பன செயற்படுத்த முடியாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு CBS இற்குள் கட்டாய முறைமை கட்டுப்பாடுகளை அமுலாக்கப்பட வேண்டும்.
(iii) நிறுவன வாடிக்கையாளர் கம்பனி வரி மற்றும் பதிவு இலக்கங்கள் மற்றும் சிறியோர் கணக்குகளிற்காக பிறப்புச் சான்றிதழ் என்பன பிரதி எடுக்கப்பட்டிருக்க முடியும்	கம்பனி பதிவு இலக்கங்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பன ஊடீளு இல் கோவையிடப்பட்ட "சட்ட ID ஆவணம்" இன் கீழ் பேணப்படுகின்றன. பிறப்புச் சான்றிதழ் இலக்கங்கள் பன்முகப்படுத்திய அதிகாரிகளால் வழங்கப்பட்டிருந்தமையால் இலங்கையில் பிரத்தியோகமாக இருக்கவில்லை. எனவே, இரண்டு தடவை ஏற்பட்டன. அதேபோல ஒரே சட்ட ID துறையில் தனியுரிமை கம்பனிகள் வியாபாரங்களின் பதிவு இலக்கங்களை பயனபடுத்துவதால் வியாபார பதிவு இலக்கங்களை பிரதியெடுக்க வாய்ப்புள்ளது. ஆகவே, இந்த துறை தனித்துவமல்லாத	தனித்தவமான பிறப்புச் சான்றிதழ் மற்றும் வியாபார பதிவு இலக்கங்கள் தொடர்பான நடைமுறை எல்லை அனுமதிக்கின்ற அதேநேரம் இருதடவை அல்லது தவறான வாடிக்கையாளர் பதிவுகளின் ஆபத்தை குறைப்பதற்கு மேலதிக மரபுவழி சரிபார்த்தல் அல்லது இரண்டாம் தர இனங்காணல்கள் அறிமுகப்படுத்தலை வங்கி வெளிப்படுத்தப்பட வேண்டும்.

	வாடிக்கையாளரை உள்வாங்குவதற்கு நகல்களை அனுமதிக்கும் வகையல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் வியாபார பதிவு இலக்கங்கள் பிரதி எடுக்கப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் CBS தனிப்பட்ட வாடிக்கையாளரை இனங்காணல் பிரத்தியேகமாக உள்ளது.	
iv) கையொப்ப அட்டைகள் மற்றும் படங்களை பிடித்தல் கட்டாய மாக்கப்பட்டிருக்கவில்லை.	அமைப்புகளில் புதிய வாடிக்கையாளர்களிற்காக நடைமுகைளின் பிரகாரம் கையொப்பமிடல் மற்றும் படங்களை பிடித்தல் கட்டாயமாக உள்ளது. CBS வசதிகள் வாடிக்கையாளர் கையொப்பம், படங்கள் மற்றும் வாடிக்கையாளர் போட்டோ பிடித்தல் பேணப்படுகின்றதுடன் கையொப்பமிடல் நடைமுறை CBS வெளியீட்டுடன் தொடங்கியிருந்தது. எவ்வாறாயினும் சில தொழில்நுட்ப பிரச்சனை ஏற்பட்டதால் நடைமுறைகள் தற்காலிகமாக நிறுத்தப் பட்டிருந்ததுடன் படம் பிடித்தல் மற்றும் கையொப்பமிடலில் தேவையான அபிவிருத்திகளை மேற்கொள்ளப்பட:டு தேவையான பரீட்சிப்புக்களை உட்படுத்தப்பட்டுள்ளது. நவம்பர் மாதத்தில் வாடிக்கையாளர் படம் மற்றும் கையொப்பம் பிடித்தல் மீள தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.	கையொப்பமிடல் மற்றும் படங்களை பிடித்தல் CBS இற்குள் கட்டாயமான கட்டுப்பாடாக இருக்க வேண்டியதுடன் வங்கியானது வாடிக்கையாளர் கையொப்பிடல் மற்றும் படம் பிடித்தல் நடைமுறை மேலும் தாமதமில்லலமல் மீளமைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) சேமிப்புகள்

i) சங்கங்களின் கட்டளைகள், வாடிககையாளரின் NIC, முகவரி அத்தாட்சி பத்திரம் மற்றும் AGM திகதி போன்ற கட்டாயமான ஆவணங்கள் மெய்மையாய்வு செய்யாமல் கணக்குகளை உருவாக்க முறைமைகள் அனுமதிக்கின்றது.	கட்டளைகள், NIC மற்றும் முகவரி அத்தாட்சி பத்திரம போன்றவற்றின் மெய்மையாய்வு கணக்கு திறக்கும் பொது பொறுப்பான உத்தியோகத்தரால் கைமுறையால் செயற்படுத்தப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் மீளாய்வு மற்றும் CBS இல் உருவாக்கின்ற கணக்கினை அனுமதிக்க முன்னர்	வங்கியானது கட்டளை, NIC, முகவரி அத்தாட்சி மற்றும் சங்கங்களின் AGM திகதி உள்ளடங்கிய சகல கட்டாயமான ஆவணங்களும் மெய்மையாய்வு செய்யாமல் கணக்கு உருவாக்கலை செயற்படுத்த முடியவில்லை என

	ஆதாரமான ஆவணங்களை மீளாய்வு மற்றும் தகுதியை மீளாய்வுசெய்வதற்கு வேண்டப்பட்டுள்ளது. ஊடீளு இல் வாடிக்கையாளரை பதியும் போது NIC மற்றும் முகவரி அத்தாட்சி பத்திர விபரங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டாளர் இந்த விபரங்ளை உள்ளபடவில்லை எனினுன் முறைமை மேலும் தொடருவதற்கு அனுமதிக்காது. சங்கங்களிற்காக வருடாந்த பொது கூட்டம் (AGM) திகதி தொடர்புபட்ட துறைகள் முறைமையில் இருந்தன எவ்வாறாயினும், அந்த ஆவணங்களை முறைமையால் தானான மெய்மையாய்வு செய்ய முடியாமையால் அத்தகைய தகவல்களின் தகுதி மற்றும் மெய்மையாய்வு செயன் முறையின் ஒரு பகுதியாக உள்ளது.	உறுதிப்படுத்துவதற்கு CBS இற்குள் முறைமை கட்டுப்பாட்டை வலுப்படுத்தப்பட வேண்டும்
ii) பாஸ்புக் மற்றும் கூற்றுப் பிரிவுகள் இருந்தன ஆனால் பயன்படுத்தப்படவில்லை	பாஸ்புக் மற்றும் வைப்பச் சான்றிதழ்கள் இருக்கின்ற செயற்பாட்டு நடைமுறை பிரகாரம் கைமுறையால் மேணப்பட்டிருந்தன. தோடர்புபட்ட துறைகள் முறைமையில் இருந்த பொதிலும் பௌதீக பாஸ்புக் மற்றும் கைமுறையால் அச்சிடப்பட்ட வைப்புச் சான்றிதழ் கிளைளில் நிலையான செயற்பாட்டு நடைமுறையாக தொருகின்றது.	வங்கியானது வாடிக்கையாளர் கணக்கு மற்றும் தகவல் முறைமை தானியங்குவதற்கு மற்றும் நெறிப்படுத்துவதற்கு CBS இற்குள் உள்ள பாஸ்புக் மற்றும் கூற்றுச் செயற்பாடுகளை பயன்படுத்தம் சாத்தியத்தை மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்.
(இ) சொல்வோர் செயற்பாடுகள்		
i) சிறிய கணக்குகளிற்கான பின்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள், தனியான பின்னோக்கிய அனுமதி மற்றும் மீளளெடுப்புகள் என்பவற்றின் மீதான போதிய கொடுக்கல் வாங்கல்கள் கட்டுப்பாடுகள்	CBS இற்குள் கொடுக்கல் வாங்கல் மாற்றுதல்கள் இரண்டு படிமுறை செயற்பாடுகளில் கட்டுப்படுத்தப்பட்டது. உள்ளீட்டாளர் மற்றும் அனுமதிக்கப்படுபவர் என்போருக்காக தனியாக பணிகளை வேண்டியிருந்தது. இந்த கடமைகளை பிரிப்பதை ஆமுல்படுத்தப்படுகின்றதுடன் குறைந்த பெறுமதியுடையவை உள்ளடங்க – மீளபெறுதல்கள்	வங்கியானது சிறுவர் கணக்குகளிலிருந்து பரிமாற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீளெடுப்புகளிற்காக மேலதிக தானியக்கி அமுலாக்குவதன் மூலம் கொடுக்கல் வாங்கல் கட்டுப்பாடுகளை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

		சுயமதிப்பாய்வு மற்றும் அனுமதிக்கு உட்பட்டது என்பதை உறுதி செய்கின்றது. சிறிய கணக்குகளிலிருந்து மீளெடுப்புகள் NSB அதிகாரச் சட்டத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றதுடன் ஆகவே, வங்கியினுடைய ஒட்டுமொத்த காசு மீளெடுப்புகள் எல்லை மற்றும் கட்டுப்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றது. சிறிய கணக்குகளிற்கான மீளெடுப்புகள் பணமெடுப்பவர் தொடங்கிய போது இனங்காண உதவும் நோக்குடன் முறைமை சூழல் விபரங்கள் (கணக்கு வகை, பாதுகாவலர் பெயர், போன்றன) காட்சிப்படுத்தபடுவதுடன் சிறியவர்களிற்காக பயன் படுத்தப்படும் பௌதீக பாஸ்புக் முதியோர் பாஸ்புக்கிலிருந்து வேறுபட்டுள்ளது. அந்த கட்டுப்பாடு அனுமதிக்கபடாத அல்லது முறையற்ற மீளெடுப்புக்களின ஆபத்தை குறைக்கின்றது.	
ii)	வடிவமைக்கப்பட்ட GL கணக்குகளிற்கு பதிவு செய்யப்படுகின்ற சர்வதேச கட்டணங்களற்காக (உதா: மீதி உறுதிப்படுத்தல் கட்டணம்) தானியங்கி முறைமை இருக்கவில்லை.	மீதி உறுதிப்படுத்தல் மற்றும் சில சர்வதேச கட்டணங்கள் செயற்பாட்டு நடைமுறைகளின் பகுதியாக CBS இற்கு வெளியே செயற்படுத்தப்படுகின்றது. ஆகவே, கட்டணம் பதிவிடல் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தரால் முறைமையில் கைமுறையால் உருவாக்கப்பட்டன. இது தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு முறையாக உள்ளதுடன் கடமைகளை பிரித்தல் மற்றும் கைமுறையால் அனுமதிதல் மூலம் உதவியளித்துள்ளது. கட்டண வகை தானியக்கக்பட வேண்டிய இருக்குமாயின் முறையாக வங்கி தானியங்கி முறையை மீளாய்வு செய்யும்.	வங்கியானது CBS இற்குள் மீதி உறுதிப்படுத்தல் கட்டணமாக பதிவு செய்கின்ற சர்வதேச கட்டணங்களின் தானியங்கல் நடைமுறை வசதியை மதிப்பிடப்பட வேண்டும்.

(ஈ) காசோலைச் செயற்பாடுகள்

முறைமையில் தொங்கல் கணக்கின் ஒரு கொடுக்கல் வாங்கலை சேர்ப்பதற்கு பல்வேறு காசோலை இலக்கங்கள்	முறைமை ஒரு கொடுககல் வாங்கலிற்காக பல காசோலை இலக்கங்களை அனுமதித்திருக்கவில்லை.	வங்கியானது செயற்பாடுகளை முறையாக கட்டுப்படுத்த மற்றும் நியாயப்படுத்தலை

அனுமதிக்கப்பட்டது.	எவ்வாறாயினும் முறைமை குறித்த கொடுக்கல் வாங்கல் காட்சிபடுத்தலின் கீழ் ஒரு தொங்கல் கணக்கு கொடுக்கல் வாங்கலை மாத்திரம் தொடர்புபடுத்த வேண்டிய பல காசோலை இலக்கங்களை அனுமதிக்கின்றது. பல காசோலைகள் (உதா: வகுப்பு சேகரிப்பு அல்லது திரண்ட பதிவுகள்) ஒற்றை பதிவு தொடர்புபட்டது. அந்த கொடுக்கல் வாங்கல்கள் மெய்மையாய்வு மற்றும் அனுமதித்தல் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. பொறுப்பக்கூறல் அல்லது கண்டறியும் தன்மையில் எவ்வித இணக்கமும் கொண்டிருக்கவில்லை என உறுதிசெய்கின்றது	உறுதிப்படுத்தவதற்கு ஒற்றை தொங்கல் கணக்கு கொடுககல் வாங்கல்கள் பல காசோலை இலக்க தொடர்பை அனுமதிக்கின்றதென முறைமை உள்ளமைப்பு மற்றும் தொடர்புடைய செயற்பாட்டு சூழ்நிலைகளை மீளாய்வு செய்யப்பட வேண்டும்.
(உ) வங்கி உத்தரவாதம்		
i) எல்லையை பூச்சியமாக சரிசெய்ய இந்த முறைமை அனுமதிக்கின்றது.	சில செயற்பாட்டு சூழ்நிலைகளிற்கு ஏற்ப எல்லைத் தொகையை பூச்சியமாக சரிசெய்ய முறைமை அனுமதிக்கின்றது. எவ்வாறாயினும், வங்கியானது எல்லைகளை விஞ்சியிருந்தொன உத்தரவாதங்களை உருவாக்கியிருக்கையில் முறைமையானது இந்த நிலை குறித்து பயன்பட்டாளருக்கு எச்சரிக்கும் நோக்கில் மேற்குறித்த நிலையை முறைமை வெளிக்காட்டுகின்றது. மேலும், சகல எல்லை உருவாக்கல்களும் அனுமதித்தல்களும் முறையான அனுமதி அல்லது எல்லை தகுதி இல்லாமல் எவ்வித வங்கி உத்தரவாதம் வழங்கப்படவில்லை என உறுதிப்படுத்துகின்றது.	வங்கியானது எல்லைத் தொகையை பூச்சியமாக சரிசெய்ய அனுமதிக்கும் முறைமை உள்ளமையை மீளாய்வு செய்யப்பட வேண்டும். மேலும் சாத்தியமான தவறான பயன்பாடு அல்லது தரவு உள்வாங்கல் தவறுகளை தவிர்க்க மேலும் மெய்மையாய்வு அல்லது கட்டப்பாடு தேவையா என மதிப்பிட வேண்டும்.
ii) காலாவதியாதலை நெருங்கும் வங்கி உத்தரவாதங்கள் அறிவித்தலை முறைமை உருவாக்கியிருக்கவில்லை.	காலாவதியாகும் 15 நாட்களிற்கு முன்னர் உருவாக்க்க்கூடிய ஒரு பிரத்தியேக அறிக்கையின் மூலம் காலாவதியை நெருங்கும் வங்கி உத்தரவாதங்களை கண்காணிக்க முறைமை செயற்பாட்டை வழங்குகின்றது. மேலும், காலாவதியான அல்லது கலைக்கப்பட்ட	காலாவதியாதலை நெருங்கும் வங்கி உத்தரவாதங்களிற்கு எச்சரிக்கை அல்லது அறிவிப்புக்களை தானகவே உருவாக்க கணனி செயற்பாட்டை மேம்படுத்துவது பற்றி வங்கி மீளாய்வு

	விடயங்களை ஏற்கனவே வெளிப்படுத்துகின்ற CLOSED (LIQ) நிலையுடன் உத்தரவாதங்களை கண்காணிக்கின்ற இந்த முறைமை மீளாய்வு செய்வதற்கு வசதியளிக்கின்றது. இந்த விடயங்கள் கூட்டாக உத்தரவாத காலாவதிகளின் முன்னரே கண்காணிப்பை ஆதரிக்கின்றன.	செய்வதற்கு பரிந்துரைத்துள்ளது.
(ஊ) NOSTRO இணக்கக்கூற்று		
NOSTRO இணக்க நடைமுறைகளை முழுமையாக கையால் மேற்கொள்ளப்பட்டது. CBS ஆனது NOSTRO இணக்க நடைமுறைக்கு ஆதரவளிப்பதற்கு அர்பணிக்கப்பட்ட மாதிரியை உள்ளடக்குகின்ற போதிலும் இனங்காணப்பட்ட தவறுகள் காரணமாக இது சரியாக இயங்கியிருக்கவில்லை.	NOSTRO இணக்க நடைமுறைகள் தற்போது முழுமையாக கையால் மேற்கொள்ளப்படுகின்றன என வங்கி ஏற்றுக்கொண்டது. CBS ஆனது NOSTRO இணக்க நடைமுறைக்கு ஆதரவளிப்பதற்கு அர்பணிக்கப்பட்ட மாதிரியை உள்ளடக்குகின்ற போதிலும் அமுலாக்கலின் பொது சில செயற்பாட்டு குறைபாடுகள் இனங்காணப்பட்டது. அந்த குறைபாடுகள் ஏற்கனவே விற்பனையாளருக்கு தெரிக்கப்பட்டதுடன் இந்த குறைபாடுகள் நிலுவையாக இருக்கின்றவை தீர்ப்பு வழங்கும் நிலையில் இருந்தது. பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன் தொகுதி நிலைப்படுத்தப்பட்டவுடன் NOSTRO இணக்க நடைமுறை CBS முறைமை மூலம் முழுமையாக தானியங்கல் செயறடபாடு மூலம் செற்படுத்தப்படுகின்றது. இடைக்காலத்தில் சகல NOSTRO இணக்க நடைமுறைகளின துல்லியம் மற்றும் முழுமையாக உறுதி செய்வதற்காக செயற்படுத்தப்பட்ட உளளக கட்டுப்பாட்டு நடைமுறை மற்றும் மேற்பார்வை மீளாய்வின் கீழ் கைமுற இணக்கம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகின்றது. .	CBS இன் NOSTRO இணக்க மாதிரியில் இனங்காணப்பட்ட செயற்பாட்டு பிரச்சனைகளை தீர்ப்பதற்கு வங்கியை விரைவுபடுத்த பரிந்துரைக்கப்பட்டது.

(எ) நிலையான கட்டளை

i)	முறைமையில் காசோலை நலனாளிகளின் பெயரை பதிவு செய்யும் போது போதுமான எழுத்துக்களை முறைமை வழங்கியிருக்கவில்லை. மேலும் முறைமை அச்சிடலிற்கு முன்னர் நலனாளிகளின் பெயரை திருத்துவதற்கு பயனாளரை அனுமதிக்கின்றது.	வழக்கமான விபார போக்கு பொதுவாக போதியதாகவுள்ள காசோலை நலனாளிகளின் பெயரை பதிவதற்காக 50 எழுத்துக்கள் வரை முறைமை அனுமதிக்கின்றது. இந்த முறைமை வடிவமைத்தல் பராமீற்றரிலுள்ள வழமையாக செயற்பாடுகனை பாதித்திருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் நலனாளிகள் பெயர் இந்த எல்லையை விஞ்சியிருக்கின்றது. கிளை பயனாளர் காசோலையில் முழுப் பெயரை கையால் எழுதுகின்றனர். அச்சிடலிற்கு முன்னர் நலனாளிகளின மாற்றுவதற்கான இயலுமை உள்ளமையால் அச்சிடல் தவறுகள் அல்லது வடிவமைத்தல் தவறுகளை திருத்த முடிவதுடன் அத்தகைய தவறுகளை அனுமதிக்கின்ற அதிகாரிகளின் பொறுப்பின் கீழ் செயற்படுகின்றது	வங்கியானது கைமுறை தலையீடு தேவைப்படாமல் காசோலை நலனாளிகளன் பெயரை பதிவதற்கு போதுமான எழுத்த எல்லைகளை உறுதிப்படுத்துவதற்கு முறைமை உள்ளமையை மீளாய்வு செய்யப்பட வேண்டும். மேலும் காசோலை அச்சிடலிற்கு முன்னர் நலனாளிகளின் பெயரை திருத்துவதற்கு அனுமதிக்கும் செயற்பாட்டை கடடுப்படுத்தப்பட வேண்டும் அல்லது மேம்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு அளவீடுகளிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.
ii)	முறைமை நிலுவையிலுள்ள STO அனுமதிகள் மீதான பயனாளர் அறிவித்தல் செய்திருக்கவில்லை.	தற்போது அனுமதியற்ற நிலையான கட்டளைகளிற்காக அர்பணிப்பு அறிக்கை கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் நாளாந்த கிளை இறுதி பரிசோதனை பிரகாரம் நிலுவையிலுள்ள STO அனுமதியை மீளாய்வு செய்வதற்கு கிளைகள் வழங்கப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தலின் பிரகாரம் கையாலான கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றுகின்றது. இது முறையான அனுமதியில்லாமல் நிலையான கட்டளைகளை நிறை வேற்றவில்லை என உறுதிப்படுத்துகின்றது.	வங்கியானது நிலுவையிலுள்ள STO அனுதிகளிற்காக தானியங்கி அறிவத்தல்கள் அல்லது விலக்கழிப்பு அறிக்கைகள் உருவாக்குவதற்கு முறைமை செயற்பாடுகள் போதுமானதாக இருப்பதென பரிந்துரைத்துள்ளது.
iii)	முறைமை ஊடாக STO காசோலை அச்சிடல் கட்டணங்கள் கையால் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.	நிலையான கட்டளைகள் ஊடாக காசோலை அச்சிடல் கட்டணங்கள் காசோலை வழங்கும் நெரத்தில் கையால் கழிக்கப்பட்டிருந்தன. இந்த நடைமுறை வியாபார தேவை நடைமுறையுடன் இணங்குவதுடன் அந்த	முறைமைக்குள் STO காசோலை அச்சிடலிற்காக தானியங்கி சாட்டுதல் நடைமுறையின் சாத்தியத்தை வெளிப்படுத்துகின்றதென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

	கட்டணங்கள் கொடுக்கல் வாங்கல் நேரத்தில் சரிய பிரயோகிக்கப்பட்டதென உறுதிப்படுத்துகின்றது. செயற்பாட்டு வழிகாட்டல் கையாலன கட்டண பிரயோகித்தல் நடைமுறையில் உள்ளதன்மை மற்றும் உண்மை தன்மையை உறுதிபடுத்துவதற்கு கிளைகளிற்கு வழங்கப்பட்டது.	

(ஏ) பாதுகாப்பு வைப்புப் பெட்டி

i) ஒப்புதல் அங்கீகாரம் மற்றும் சரிபார்ப்புகளில் பிரதான கட்டுப்பாட்டு இடைவெளி இனங்காணப்படுகின்றன.	SDBs தொடர்புபட்ட சகல நிதி மற்றும் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகள் (உதா. ஆரம்ப, வாடகை சேகரிப்பு) முறைமைக்குள் ஒரு மட்ட அனுமதியை வேண்டியிருந்தது. SDB இன் இறுதி நடவடிக்கை நிதியல்லாத, நிர்வாக செயற்பாடாக உள்ளது. கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு மேலதிக அனுமதித்தல் அடுக்கு தேவையாவென மதிப்பிடுவதற்கு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் மீளாய்வின் அடிப்படையில் ஏதாவது தேவையான மாற்றங்களை செயற்படுத்தப்படும்.	வங்கியானது அந்த தற்போதைய நிர்வாக வகுதிப்படுத்தல் உள்ளடங்கலாக (SDBs இன் முடிவுத்தல் போன்ற) சகல நிதி மற்றும் பிராதான செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக போதிய அனுமதித்தல் மற்றும் சரிபார்த்தல் பொறிமுறை என்பன அமுலாக்குவதன் மூலம் முறைமை கட்டுப்பாட்டை வலுப்படுத்த வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
ii) வேண்டப்பட்ட பிணை வைப்பு உள்ளதா என்பதைப் பரிசோதிக்காமல் பாதுகாப்பு பெட்டிகளை திறப்பதற்கு முறைமை அனுமதிக்கின்றது.	• முறைமை வரையறை மற்றும் கைமுறை கட்டுப்பாடு: முறைமையின் எல்லையை அது தானாகவே பிணை வைப்பு நிதிகளை தடுப்பதற்கு அல்லது சரிபார்ப்பதற்கு முடியாது என நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அந்த ஆபத்தை குறைப்தற்கு வலுவான கையேடு கட்டுப்பாட்டு நடைமுறையில் உள்ளது. • கட்டுப்பாட்டு நடைமுறை: உள்ளக சுற்றறிக்கை மூலம் சகல கிளைகளிற்கும் அனுப்படப்டட செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் SDB திறக:கும் நேரத்தில் முழு பிணை வைப்புத் தொகைக்கும் சேமிப்பு கணக்கில் அதிகாரி கைமுறையால் கணக்கீடு	வங்கியானது பாதுகாப்பு பெட்டியை திறப்பதற்கு முன்னர் பிணை வைப்பு நிதிகளை பூட்டுவதற்கான முறைமை கட்டுப்பாடு தானியங்குதல் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
iii) முறைமையில் பாதுகாப்பு பெட்டிகளை திறப்பதற்கு பிணைவபைப்பு நிதிகள்		

வேண்டப்பட்டிருக்கவில்லை.	செய்யப்பட்டு “நிதி பூட்டை” வைக்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படையாக கட்டளையிடுகின்றது. முறைமை கொடுக்கல் வாங்கலை பாதுகாத்திருக்கவில்லை. இந்த முறைமை ஆனால், கைநூல் பூட்டைச் செய்வதற்கு தவறியமை தாபிக்கப்பட்ட நடைமுறையை மீறுவதாக உள்ளது. • வேறு வகையான பிணைவைப்பு: நியான வைப்புக்கள் அல்லது பிணை வைப்பாக வழங்கப்பட்ட வேறு சான்றிதழ்கள் பௌதீக பிணை வைப்புககள் வங்கியில் பிணையாக வைக்கப்பட்டு உறுதியான கட்டுப்பாட்டை வழங்குகின்றது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா . 16,285.24 மில்லியன் தொகையான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 7,216.48 மில்லியன் தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 9,068.761 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. 43,216.860 மில்லியனால் தேறிய வட்டி வருமானம் அதிகரித்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

2024 ஆம் அண்டின் பொது வங்கியின் மொத்த வட்டி வருமானம் அரசங்க பிணைகள், கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து பெறப்பட்ட வட்டியின் வீழ்ச்சி காரணமாக ரூபா 23,218.95 மில்லியன் அல்லது 10.23 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டிற்கான மொத்த வட்டிச் செலவினம் வைப்புக்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 66,435.82 மில்லியன் அல்லது 33.66 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி சதவீதங்களுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான சில முக்கிய வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	முரண் தொகை அதிகரிப்பு /(வீழ்ச்சி) (ரூபா மில்)	முரண் %	முரணிற்கான காரணம்
தேறிய வட்டி வருமானம்	43,216.86	146	முனைன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் வட்டிச் செலவினம் 33.65 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. 10.23 சதவீதத்தால் வட்டி வருமானத்தின் வீழ்ச்சியை விட குறிப்பிடத்தக்களவு உயர்வாக இருந்தது. இந்த வட்டிச் செலவின வீழ்ச்சி அறிக்கையிடல் காலப்பகுதியின் போது நிலவிய

			குறைந்த வட்டி வீதங்கள் காரணமாக ஆரம்பமாக உள்ளது.
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	474.19	37	இந்த அதிகரிப்பு வியாபார மற்றும் அனுப்பதல் சேவைகளை போல் கடன் மெதாடர்பான கட்டணங்களை உழைப்பதன் மூலம் ஆரம்ப இயக்கமாக உள்ளது.
தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம்	198.67	77	வெளிநாட்டு நாணயமாற்றுத் மீதான மீள்மதிப்பு இலாபம் ரூபா 114.08 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதேநேரம் அறிக்கையிடல் காலத்தின் போது ரூபா 57.76 மில்லியனால் பங்கிலாப வருமானம் விரிந்திருந்தது.
தள்ளுபடிக் கட்டணங்கள்	6,947.23	163	3 கட்ட கடன்களில் தள்ளுபடி கட்டணங்கள் ரூபா 3,120.50 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதேநேரம் திறைசேரி பெற வேண்டியவை தொடர்பில் ரூபா 4,602.67 மில்லியன் தொகையான கடன் தள்ளுபடி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், துறை வீதங்களின் ஒப்பீட்டுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் சில முக்கிய வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விபரங்கள்	**துறை வீதம்***	**வங்கி**	
இலாபத்தன்மை வீதம்		**2024 (%)**	**2023 (%)**
மூலதனத்திற்கான வருவாய் (ROE)	14.3	18.07	9.36
சொத்துக்கான வருவாய் (ROA)	1.6	1.54	0.26
தேறிய வட்டி எல்லை	4.6	4.23	1.79
சொத்து தர வீதம்			
மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களிற்கான 3 கட்ட கடன் வீதம்	12.9	5.18	2.41
போதிய மூலமதன வீதம்			
CAR-ரையர் I வீதம் (குறைந்தது 8.5%)	16.8	23.42	16.91
மொத்த CAR வீதம் (குறைந்தது 12.5%)	19.9	25.88	19.26

* துறை வீதங்கள் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்ட்ட தகவல்களிலிருந்து கணிப்பிடப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வங்கியினுடைய மூலதனத்திற்கான வருவாய் (ROE)) மற்றும் சொத்துக்கான வருவாய் (ROA) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 இல் முறையே 8.71 சதவீதம் மற்றும் 1.28 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த போதிய மூலதன வீதம் ஆகக்குறைந்த வெண்டுகை 12.5 சதவீதத்தை விஞ்சி 6.62 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. .

(iii) வங்கியினுடைய தேறிய வட்டி எல்லை முனனைய அண்டுடன் ஒப்பிடும் பொது 2024 இல் 2.44 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2025 யூன் 30 இல் வங்கியானது அறவிடப்படாதிருந்த 104 மோசடி நடவடிக்கை காரணமாக ரூபா 118.366 மில்லியன் நட்டத்தை அடைந்திருந்தது. அத்திகதியில் உள்ளவாறு ரூபா 74.490 மில்லியன் தொகையான மீதி இருக்கின்றன.	ஊழியர்கள் செய்யப்பட்ட மேசடி தொடர்பில் இழப்பக்களை குறைப்பதற்கு வங்கியால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.	
i) மொத்த 14 மோசடி வழக்குகள் வங்கிக்கு ரூபா மில்லியன் நட்டத்தை ஏற்படுத்தியமையால் உத்தியோகத்தர்களால் பொறுப் பேற்கப்பட்டிருந்தது. 2025 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 46.68 மில்லியன் அறவிடப்படாதிருந்தது, அத்திகதியில் உள்ளவாறு இருக்கின்ற மொத்த நட்டத்தில் 55 சதவீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.	• ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் மோசடி செய்யப்பட்ட உத்தியோகத்தரிற்கு எதிராக பொலீஸ் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. • வங்கியால் உரிய நட்டங்களை அறவிடுவதற்கு நீதி மன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தது. • மோசடிகளால் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய காப்புறுதி கோரிக்கைகளை சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன. அவை வங்கியின் இழப்பீட்டு காப்புறுதி கொள்கைகளால ஈடுசெய்யப்பட்டுள்ளது.	வங்கியானது மோசடி நடவடிக்கைகளை தவிர்ப்பதற்கும் அவற்றினை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கும் கிளைச் செயற்பாடுகள் மீது போதிய உள்ளக கட்டுப்பாடுகளை அமுலாக்கப்பட வேண்டும்.
ii) யுவுஆ அட்டை மோசடிகள் தொடர்புபட்டிருந்த மொத்தம் 49 வழக்குகள் 2021 மற்றும் 2024	காப்புறுதி கோரிக்கைகள் தொடங்கப்பட்டது. பொருட்கள் வங்கியால் பறிமுதல்	

இற்கு இடையிலான காலப்பகுதிக்கு இடையில் ஏற்பட்டிருந்தது. அவற்றில் 39 வழக்குகளில் ரூபா 3.22 மில்லியன் கூட்டு மொத்த தொகையான நட்டங்கள் பயம் செலுத்தும் செயலியை கக் செய்வதன் மூலம் பெறப்பட்ட அட்டை தகவல்களை பயன்படுத்தி ஒன்லைன் கொள்வனவுகள் மூலம் மூன்றாம் தரப்பினரால் செய்யப்பட்ட மோசடிகளாக இருந்தது. 2025 யூன் 30 அன கணக்காய்வு திகதியில் உள்ளவாறு அந்த 39 கக்கிங் தொடர்புபட்ட மோசடி வழக்குகள் தொடர்பில் காப்புறுதி கொரிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை.	செய்யப்பட்டன மேலும் தீர்விற்காக காப்புறுதி நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.	
iii) மேலும் அந்த மொசடி நடவடிக்கைகள் 2025 யூன் 30 இல் உள்ளவாறு அறவிடப்படாது இருக்கின்ற ரூபா 40.48 மில்லியனுடன் ஐந்து ஆண்டுகளிற்கு முன்னர் ஏற்பட்ட 30 சம்பவங்களில் இருந்தான நட்டங்களை உள்ளடக்குகின்றது.	தயவு செய்த 3.1.i இற்கான பதிலை பார்க்கவும்.	

3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ)	வங்கியின் ஆபத்து முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.		
i)	வங்கியின் ஆபத்தான வியாபார செயற்பாடுகளாக உள்ள திறைசேரி செயற்பாடுகள் தானியக்கமில்லாமல் செயற்பட்டை தொடருகின்றது. முகாமைத்துவம் திறைசேரி முகாமைத்துவ முறைமையின் அமுலாக்கலை முன்னுரிமையளித்து நிறைவேற்றியிருக்கவில்லை.	வங்கியானது 2024 ஆகஸ்ட் மாதத்தில் ‘‘பைனாக்கிள் திறைசேரி’’ மூல முகாமைத்துவத்தில் தீர்வை பெற்றிருந்தது. பிரதான குழுப் பயிற்சி மற்றும் இடைவெளி பகுப்பாய்விற்கு பின்னர் 2025 ஏப்ரலில் தொடங்கியிருந்தது. செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் கால அட்டவணை 2025/03/31 ஆக உள்ளது	வங்கியானது திறைசேரி திறைசெரி செயற்பாடுகள் தானியக்க மற்றும் கால அட்டவணைக்கு விரிவான திறைசெரி முகாமைத்துவ முறைமை அமுலாக்க முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.
ii)	நிதி, செயற்பாட்டு, நன்மதிப்பு, இணக்கம் அல்லது மூல ஆபத்து	காணக்காய்ன் ஊடாக களைகளை மேவுதல் தொடர்புபட்ட கணக்காய்வு	முகாமைத்துவம் ‘‘பிரதான செயற்பாட்டு

தொடர்பில் முனனரே எச்சரிக்கை அறிவித்தல்கள் வழங்குவதை நோக்கமாக கொண்டு காலாண்டு ‘‘பிரதான செயற்பாட்டு ஆபத்து குறிகாட்டி கண்காணிப்பு அறிக்கைகளில்’’ தொடர்ந்தும் 40 சதவீதத்திற்கும் அதிகமாக இரந்தது. இது முன்னைய ஆண்டுகளில் பல காலாண்டுகளில் பெருமளவிலான செயற்பாட்டு அபத்து வெளிப்பாட்டை குறிக்கின்றது. எவ்வாறாயினும், நீண்ட காலமாக வங்கியின் செயற்பாடு மற்றும் நிதி ஸ்திரத்தன்மை மோசமாக பாதிக்கும் சாத்தியம் இருந்த பொதிலும் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்தவம் அந்த உயர்ந்து அபத்து பகுதிகளை போதுமனளவு கருத்திற் கொள்ளவில்லை என அவதானிக்கப்பட்டது.

பிரச்சனை முகாமைத்துவத்தில் பின்வரும் அட்டவணை பொழிப்பு காலாண்டு ரீதியாக தொகைகளை சமர்ப்பிக்கின்றது.

	1Q 2024	2Q 2024	3Q 2024	4Q 2024
காலாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு முன்னைய மூன்று ஆண்டுகளில் கணக்காய்விற்கு உட்படுத்தப் படாத கிளைகளின் எண்ணிக்கை (விரிவான கணக்காய்வு)	**71**	**66**	**57**	**50**
காலாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு முன்னைய இரண்டு ஆண்டுகளில் ஏதாவது வகை கணக்காய்விற்கு உட்படுத்தப் படாத கிளைகளின் எண்ணிக்கை	62	68	54	28

முன்னைய முன்று ஆண்டுகளில் விரிவான கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்காத கிளைகளின் எண்ணிக்கை 2024 இன் 1Q இன் 71 உடன் ஒப்பிடுகையில் 2024 4Q இல் 50 இற்கு குறைவடைந்திருந்தது. கணக்காய்வின் ஊடாக கிளை வலையமைப்பை மேவுகையை குறிக்கின்றது. இருப்பினும், அந்த 22 கிளைகள் 2025 ஆம் ஆண்டின் போது விரவான கணக்காய்வின் ஊடாக மேவப்படும்.

முன்னைய இரண்டு ஆண்டுகளில் ஏதாவது வகை கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்காத கிளைகளின் எண்ணிக்கை 2024 இன் 1Q இன் 62 உடன் ஒப்பிடுகையில் 2024 4Q இல் 28 இற்கு குறைவடைந்திருந்தது. இருப்பினும், அந்த 08 கிளைகள் 2025 ஆம் ஆண்டின்

ஆபத்து குறிகாட்டி கண்காணிப்பு அறிக்கைகளில்’’ வெளிப்படுத்தப்பட்ட குறியீடுகள் ‘‘கணக்காய்வு முகாமைத்துவ பிரச்சனை மற்றும் இணக்கம்’’ உயர் விடப்பிடியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		போது ஊடாக மேவப்பட்டன.. 2025.03.04 இல் நடைபெற்ற BAC கூட்டத்தில் மொத்தம் 127 கிளைகள் தொடர்பான கணக்காய்வை மேவுகின்ற செயல் நடவடிக்கை திட்டம் அனுமதிக்கப்பட்டது. (விரிவான, ஆச்சரியமான, சேயன்முறை, மூலவுரு, T24 முறைமை கிளை அலுவலக கணக்காய்வு). 2025.05.19 வரை ஏற்கனவெ செய்யப்பட்ட மேலதிக கணக்காய்வில் பல கிளைகள் 2025 செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. சில உத்தியோகத்தர்கள் பிரதான வங்கியியல் செயற்திட்டத்திற்காக ஈ:படுத்தப்பட்டுள்ளனர். மேலும் அதிக உத்தியோகத்தர்கள் முன்னைய ஆண்டில் கிளைகளின் பாதுகாப்பு இன்மைக்கு காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வு மற்றும் கண்காணிப்ப பிரிவு T24 முறைமை அடிப்படையிலான கிளை கணக்காய்வை தொடங்கி 2025 ஆம் ஆண்டில் கணக்காய்வு திட்டத்தில் விரிவான கணக்காய்வுகளின் எண்ணிக்கையை அதிகரித்திருந்தது. மேலும் கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவு கணக்காய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் வேலையில் ஈடுப்டுள்ளனர். இது இறுதிக் கட்டத்தில் உள்ளது. 2025.03.04 இல் உள்ளவாறு நடைபெற்ற BAC கூட்டம் கிளைக் கணக்காய்வை மேவி மூன்று ஆண்டுகளிற்கு ஒரு முறை விரிவான கணக்காகாய்வு நடாத்துவதற்கு தீர்மானித்தது. உள்ளக கணக்காய்வு பிரிவு எதிர்காலத்தில் அத்தகைய கணக்காய்வு மேவுகையை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது	
iii)	அனுமதிக்கப்பட்ட வங்கிகளிற்கான ஒருங்கிணைந்த ஆபத்து கட்டமைப்பு மீதான 2011 இல் 07 ஆம் இலக்க வங்கியியல் அதிகாரச் சட்டத்தின் நெறிப்படுத்தலின் வழிகாட்டல் ஏ இன் 2.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு செயற்பாட்டு பகுதிகளிலுள்ள ஆபத்து முகாமைத்துவம் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவத்தால் வகுக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும்	அட்டை நிலைய செயற்பாடுகளிற்காக விரிவான செயற்பாட்டு கைநூல் 2024 ஒக்தோபரிலிருந்து இடம்பெற்றது. எவ்வாறாயினும் அண்மைய பிரதான வங்கியியல் முறைமை இடம் மாற்றிய பின்னர் சில அட்டடை நிலைய செயற்பாடுகள் இன்னமும் மாற்றங்களிற்கும் சுத்திகரிப்புக்களிறகும் உட்படுத்தப் படாதிருந்தது. இந்த செயற்பாட்டு மாற்றங்கள் இறுதியாக்கப்பட்டவுடன் ஒத்துப்போகாத கைநூல்களை முழுமையாக புதுப்பிக்கப்படும். செயற்பாட்டு கைநூல் தற்போது	தரநிலைப்படுத்தப்பட்ட திறமையான மற்றும் சிறந்த கட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை உறதி செய்வதற்கு அட்டை நிலையத்தின் சகல மாற்றங்களை இணைத்த செயற்பாட்டு கைநூல்களைவ ங்கி மளாய்வு செய்து நாளது வரையாக்கவதற்கு நடவடிக்கை எடுக்க்பட வேண்டும்.

<table>
<tr>
<td></td>
<td>வழிகாட்டல்களிற்குள் வரையறுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வங்கியானது தீர்க்கப்படாத தொங்கல் கணக்குகள் மற்றும் கைநூல் செயற்பாடுகள் என்பவற்றில் தங்கியிருந்தல். இருப்பினும் அட்டை நிலைய செயற்பாடுகளிற்கான செயற்பாட்டு கைநூல் தயாரிப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்பாடுகள் வினைத்திறன் மற்றும் நிலையான தன்மையை குறை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.</td>
<td>மீளாய்வில் உள்ளது.</td>
<td></td>
</tr>
<tr>
<td>iv)</td>
<td>வங்கியின் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளில் ஒன்றாக இருந்த கூட்டு நிதி செயற்பாடுகளின் பிரகாரம், இந்த செயற்பாடுகளின் கணக்காய்வு குறைந்தது வருடாந்தம் நடாத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், இறுதியாக பூர்த்தியாக்க்பபட்ட கணக்காய்வு 2020 ஆம் ஆண்டில் செய்யப்பட்டதுடன் 2022.˙.23 இற்காக செய்யப்பட்ட கணக்காய்வு 2024 ஆகஸ்ட் மாதத்தில் BAC இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.</td>
<td>2020 ஆம் ஆண்டிற்கு பின்னர் கூட்டு நிதிப் பிரிவு தொடர்பான கணக்காய்வுகளை கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவு நடாத்தியிருந்ததுடன் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.
<table>
<tr><th>கணக்காய்வு</th><th>கணக்காய்வு காலப் பகுதி</th><th>இறுதி கணக்காய்வு திகதி</th><th>BAC தாள் திகதி</th></tr>
<tr><td>கணக்காய்வு பின் தொடர்</td><td>2021</td><td>24.11.2021</td><td>24.11.2021</td></tr>
<tr><td>விரிவான கணக்காய்வு</td><td>2022/2023</td><td>31.05.2024</td><td>01.07.2024</td></tr>
</table>
2025 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செயற்பாட்டில் உள்ளன.</td>
<td>வங்கிய்ன் ஒட்டுமொத்த செயற்பாடுகள் மற்றும் இடர் ஆபரத்து விபர குறிப்பில் கூட்டு நிதிச் செயற்பாடுகள் வருடந்தோறும் முறையாக கணக்கய்வு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>v)</td>
<td>ஆபத்து முகாமைத்துவ பிரிவு 2024 மே ஆண்டிற்காக திறைசேரியின் பிரதான வியாபார பகுதிகள், சர்வதேச வங்கியியல் பிரிவு செயற்பாடுகள் மற்றும் அட்டை நிலைய செயற்பாடுகள் என்பவற்றின் ஆபத்து கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு நடாத்தியிருக்கவில்லை.</td>
<td>2024 செப்தெம்பரில்வங்கியானது இருக்கின்ற நடைமுறைகளை மீள பொறிமுறைப்படுத்த வெண்டப்பட்டிருந்த புதிய பிரதான வங்கியியல் தீர்வு நிறுத்தப்பட்டது. மேலும் திறைசேரி பிரிவின் முன்பக்க மற்றும் பின்பக்க அலுவலகங்கள் இரண்டிற்கும் இணைத்திருந்த உத்தியோகத்தர்கள் தீறைசேரி முகாமைத்து முறைமை அமுலாக்கல் பிரிவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். செயற்பாடுகள் இறுதியாக்கப்பட்டிருக்காததுடன் செயற்பாட்டு உரிமையாளர்கள் அதாவது சொல்லப்பட்ட பிரிவிற்கு</td>
<td>திறைசேரி, சர்வசே வங்கி பிரிவு செயற்பாடுகள் மற்றும் அட்டை நிலைய செயற்பாடுகள் உள்ளடங்கிய சகல வியாபார பகுதிகளிற்குமான ஆபத்து முகாமைத்துவ சுய மதிப்பீடுகள் (RCSAs) விரிவான இனங்காணல் மற்றும் ஆபத்து செயற்பாடுகளின் மதிப்பாய்வு என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்கு</td>
</tr>
</table>

		இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்புபட்ட முறைமை தொடர்பான ஈடுபாடுகளில் தீவிரமாக இருந்தனர். இந்நேரத்தில் RCSA களை நடாத்துதல் பௌத்றிவு மற்றும் நடைமுறைக்கு சாத்தியமற்றிருந்தது. இது BIRMC. இற்கு அறிவிக்கப்பட்டது. ஆகவே, RCSA நடைமுறைக்குள் RMD ஐ மாத்திரம் முன்னைய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட RCSAs இலிருந்தான பரிந்துரைக்கு மட்டங்களை மீளாய்வு செய்திருந்தது. RMD ஆனது 2025 ஆம் அண்டிற்காக குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை செயற்பாட்டு உரிமையாளர்களுடன் RCSA ஐ தொடங்கியிருந்தது.	செய்யப்பட வேண்டும்.
